# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1690/11 - 2011 ජනවාරි 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.01.27

*1690/11 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**நாணயச் சட்டம்**

*நாணயச் சட்டம் (அத்தியாயம் 422) பிரிவு 32 உ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*தலைவர்,*
*நாணயச்சபை.*

*இலங்கை மத்திய வங்கி,*
*கொழும்பு,*
*2011, சனவரி 26.*

**இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள்**

***2010 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்***

*1. எடுத்துக்காட்டல்.*

*1.1 இந்த ஒழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. மூல ஒழுங்கு விதியில் திருத்தங்கள்.*

*2.1 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28ஆம் திகதியிடப்பட்ட 1673/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகிறது.*

*"ஒழுங்குவிதி" என்ற சொல்லுக்கு மாற்றீடு.*

*2.2 "ஒழுங்குவிதி" எனும் சொல் பிரயோகிக்கப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் "ஒழுங்குவிதி" எனும் சொல் மாற்றீடு செய்யப்படுகின்றது.*

*ஒழுங்கு விதி 5.2 (iii) இற்கான மாற்றீடு.*

*2.3 ஒழுங்குவிதி 5 இல் பந்தி 5.2 (iii) நீக்கப்பட்டு, அந்த ஒழுங்குவிதி பின்வரும் பந்தி மூலம் மாற்றீடு செய்யப்படுகின்றது:*

> *"5.2 (iii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்தவங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக் கம்பனிச் சட்டம் (கம்பனி ஆளுகை) என்பவற்றினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான பணிப்பாளர்கள், முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் பங்கு தாரர்கள் நீங்கலாக ஏனைய தொடர்பான தரப்பினர்களின் வைப்புப் பொறுப்புக்கள்."*

*02-280*